## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P. No. 78/2021 | Date : 14.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: நடராஜன் | S/o. மாணிக்கம் | Evidence Recorded Time: 12.51 P.M. to 01.30 P.M. |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பெயிண்டிங் அடிக்க கூலிக்கு வேலை செய்து வருகிறேன். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியுமா என்றால் தெரியும். நான் வேறு ஒரு நபரின் உதவியில்லாமல் எந்த வேலையும் செய்ய முடியுமா என்றால் வலுவான பொருட்களை துாக்க முடியாது, மற்ற வேலைகளை செய்வேன். நான் நன்றாக வேலை செய்ய முடியும் என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் முதலிரவு அன்று எதிர்மனுதாரர் அவருடைய அக்கா கணவருடன் ஒப்பிட்டு பேசியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. திருமணம் நடைபெற்று மறு அழைப்பின் போது எனக்கும், அக்கா கணவருக்கும் சாப்பாடு பரிமாறும் போது எதிர்மனுதாரர் அணிந்திருந்த சால்வை கீழே விழுந்ததை நான் சொன்ன போது உங்களுக்காக நான் சால் அணி முடியாது என்று கூறியதாக இந்த மனுவிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புதிதாக திருமணம் நடைபெற்றவர்கள் இதுபோல செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல. அன்று இரவே எதிர்மனுதாரர் தனக்கு பாஸ்கர் என்வரோடு காதல் இருந்ததை சொன்னார். பிரமாண பத்திரத்திலும், மனுவிலும் ஒரு கை ஊனம் என்று கூறியுள்ளேன், ஆனால் எந்த கை ஊனம் என்று கூறவில்லை என்றால் சரிதான், எனது வலதுகை தான் ஊனமாக உள்ளது. திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் ஒரு இந்து குடும்ப மனைவி செய்யவேண்டிய பணிவிடகளை செய்தார் என்றால் சரியல்ல, அவர் எந்த வேலைகளையும் செய்யவில்லை. 01.01.2009-ம் தேதி எதிர்மனுதாரர் நிறைமாத கர்பிணியாக இருந்தததை கருதாமல் நான் அவரை அடித்து வீட்டை விட்டு வெளியேற்றினேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பு எதிர்மனுதாரருக்கு வளைகாப்பு நடத்தவேண்டும் என்று சொன்னத்திற்கு நான் உடன்படவில்லை என்றால் சரியல்ல. நான் மனுவில் எதிர்மனுதாரருக்கு நான் வளைகாப்பு நடத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எந்த பெண்ணுக்கும் வளைகாப்பு நடத்துவதாக இருந்தால் பெண் வீட்டில் தான் நடத்துவார்கள் என்றால் அவ்வாறு இல்லை, நான்தான் செய்தேன். எதிர்மனுதாரருக்கு

கற்பம் மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தபோது நான் பார்க்கவரவில்லை என்றால் சரியல்ல, நான்தான் உடன் இருந்தேன். குழந்தை பிறப்பிற்கான செலவுகளை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் செய்தாகர்கள் என்றால் சரியல்ல, நான்தான் செய்தேன். அவ்வாறு நான்தான் செலவு செய்தேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும் முதல் குழந்தை பிறப்பிற்கு பெண்ணின் பெற்றோர்கள்தான் செய்வார்கள் என்றும், நான் செய்ததாக பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றாலு சரியல்ல. குழந்தை பிறந்த பின்பு இன்று வரை நான் குழந்தையை பார்க்கவில்லை என்றால் சரியல்ல, குழந்தை பிறந்தது முதல் உடன் இருந்தேன், பிரச்சனை செய்யும் வரை எங்கள் வீட்டில்தான் இருந்தார். குழந்தை பிறந்த பிறகு ஒரு மாதம் கழித்து எதிர்மனுதாரரையும், குழந்தையையும் என் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டேன். குழந்தை பிறகு ஒரு மாதத்தில் நான் அழைத்து செல்லவில்லை என்றாலும், மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் ஐந்து மாதத்தில் அழைத்து சென்றதாக கூறியுள்ளேன், ஆனால் அவ்வாறு ஐந்து மாதத்திலும் அழைத்து செல்லவில்லை என்றாலும், இதுவரை நான் குழந்தையை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. 05.06.2009-ம் தேதியில் என்னிடம் தகராறு செய்துவிட்டு எதிர்மனுதாரர் அவரது அக்கா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று மனுவிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 06.06.2009-ம் தேதி எதிர்மனுதாரர் பெற்றோர் சண்டை செய்தார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் தகராறு செய்தற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 08.01.2010-ம் தேதி எதிர்மனுதாரரை சேர்ந்து வாழ சொல்லி புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், அவர் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக கூறினார். மேற்படி அதே தேதியில் எதிர்மனுதாரர் மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் ரூபாய் மூன்று லட்சம் வரதட்சணை கேட்டதாக எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரணைக்கு அழைத்த போது அதில் இருந்து தப்பிப்பதற்காக ராசிபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் மீது ஒரு சி.எஸ்.ஆர் எண்.4/2010

ரசீது கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. எதிர்மனுதாரர் புகார் கொடுத்து என்னை சிறையில் அடைப்பதாக கூறவில்லை என்றால் சரியல்ல. 07.02.2011–ம் தேதியில் அஸ்தம்பட்டி நால்ரோடு அருகே சென்றபோது நானே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் மீது ஆம்னி வேன் மோதியது. அது சம்மந்தமாக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதன் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் விபத்தில் அடிபட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கௌதமி என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொள்டுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், கௌதமியும் வீட்டில் தனியாக இருக்கும் போது எதிர்மனுதாரர் எனக்கு போன் செய்யும் போது அதை கௌதமி எடுத்து பேசினார் என்றால் அது தவறாகும். எதிர்மனுதாரர் தன்னை மனைவி என்று கூறியபோது அதற்கு கௌதமி தான் தன்னை என்னுடைய மனைவி என்று கூறினார் என்றால் சரியல்ல. கௌதமி நான் ஏற்கனவே திருமணம் ஆனவர் என்ற விசயம் தெரிந்து என்னிடம் தகராறு செய்த போது நான்தான் சேலம் நான்கு ரோட்டில் கண்ணாடியால் என்னை நானே அறுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. கண்ணாடியால் அறுத்துக்கொண்டதை மறைப்பதற்குதான் நான் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அடிப்பட்டதை தெரிந்து கொண்டு எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு வந்து டாக்டரிடம் விசாரித்த போது விபத்தினால் அடிபடவில்லை என்று மருத்துவர் கூறினார் என்றால் சரியல்ல. அப்போது எனக்கு கழுத்தி மட்டும் தான் காயம் ஏற்பட்டது என்றாலும், வேறு எங்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கைகளிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது, அதற்கு சான்று வைத்துள்ளேன் . மருத்துவ மனையில் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அந்த மூன்று நாட்களும் எதிர்மனுதாரர்தான் எனக்கு பணிவிடை செய்தார் என்றால் அது தவறாகும், அவர் சண்டை செய்துவிட்டு சென்றுவிட்டார். எதிர்மனுதாரர் அவ்வாறு பணிவிடை செய்ததால் அவரை என்னுடன் அழைத்து செல்வேன் என்று இருந்தார் என்றால் சரியல்ல, அவர் சண்டை செய்துவிட்டு சென்றுவிட்டார். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்த போது மனைவி என்ற இடத்தில் கௌதமி என்பவர்தான் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுவில் எதிர்மனுதாரர் என்னுடன்

சேர்ந்து வாழ வில்லை என்று 20.11.2014–ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே நான் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாமக்கல்லில் விவாகரத்து கேட்டும், ராசிபுரத்தில் சேர்ந்து வாழ கேட்டும் தாக்கல் செய்தேன். அந்த வழக்குகள் என்ன ஆனது என்றால் வழக்கறிஞர் சரியாக வழக்கை நடத்தாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி ஆனது என்றால் சரியல்ல, வழக்கறிஞர் எனக்கு சரியாக தகவல் கொடுக்காததால் தள்ளுபடி செய்யப்பட்டது. ராசிபுரத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை குறித்து இந்த மனுவில் என்ன கூறியுள்ளேன் என்றால் தெரியாது. எனக்கு விபத்து ஏற்பட்ட காரணத்தினால் தான் மேற்சொன்ன நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் தெரியாது. 07.05.2011–ல் விபத்து நடந்ததாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் 07.05.2015–ல் விபத்து நடைபெற்றது. 07.05.2011ம் தேதியில் விபத்து ஏற்பட்ட காரணத்தினால் 14.02.2017–ல் ராசிபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நான்கரை வருடங்கள் கழித்து தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 2015–ம் ஆண்டு நாமக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் GWOP.114/2015 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் சரிவர நடத்தவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. GWOP.114/2015 என்ற மனுவை எதற்காக தாக்கல்செய்தேன் என்றால் குழந்தையை என் பொறுப்பில் ஒப்படைக்க கேட்டிருந்தேன், அந்த மனுவும் நான் நடத்தாததால் தள்ளுபடி ஆகிவிட்டது. நான் மனுக்களை தாக்கல் செய்துவிட்டு, அவை விசாரணைக்கு வரும் போது நடத்தாமல் விட்டுவிட்டு எதிர்மனுதாரரை அலைக்கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மனுக்களை தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.